2017 ஜூலை 5]

விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்குரிய அரசாணை வெளியிடப்பட்டு, விதிகள் வகுக்கப்பட்டு, சட்ட நடவடிக்கைக்கு இன்னும் வரவில்லை. அதையும் உடனடியாகச் செய்து தருவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் ஆகியோரிடம் இதுகுறித்து நேற்று 12 மணியளவில் நான் பேசினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, பிளாஸ்டிக்கு ஒரு மாற்று வழி கண்டறியப்பட வேண்டுமென்று நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் இதுகுறித்து விரிவாகப் பேசி, பிளாஸ்டிக்கை தடை செய்வதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர்களிடம் தெரிவித்திருக்கிறேன். கூடியவிரைவில் அதுகுறித்து நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 135, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

135—

நெல் கொள்முதல் நிலையம்

***3130—திரு. மு.பெ. கிரி:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் நகரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் அருகே நெல் விளைச்சல் பகுதியான புதுப்பாளையம் கிராமத்தில், கொள்முதல் பருவம் 2015–2016 ஆம் ஆண்டில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் ஒன்று திறக்கப்பட்டு, அதன்வாயிலாக 1,577 மெட்ரிக் டன் அளவிற்கு நெல் கொள்முதல் செய்யப்பட்டது. அதன் பின் நெல் வரத்து இல்லாத காரணத்தால், மேற்படி கொள்முதல் நிலையம் மூடப்பட்டுள்ளது. குறிப்பாக, செங்கம் பகுதியிலுள்ள விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் நிலையம் அமைக்கக் கோரிக்கை ஏதும் வரப்பெறாததால் செங்கம் நகரில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த புதுப்பாளையம் கிராமம் எனது செங்கம் தொகுதியிலிருந்து கடைக்கோடியில் சுமார் 60 கிலோ மீட்டர் தூரத்திலும், ஊத்தங்கரை தொகுதியிலிருந்து 50 கிலோ மீட்டர் தூரத்திலும் இருக்கின்றது. தற்போது, விவசாயிகள் விளைவிக்கின்ற நெல்லை, தனியார் வியாபாரிகள் நேரடியாகச் சென்று விளை நிலத்திலேயே லாரியை வைத்து எடைபோட்டு வாங்கிக் கொள்கிறார்கள். இதனால், விவசாயிகள் விளைவித்த நெல்லுக்கு உரிய விலையும் கிடைக்காமல், பணத்தை பெறுவதற்கும் சிரமப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து நெல் விளைகின்ற காலத்தில் அங்கே நெல் கொள்முதல் நிலையத்தினை கட்டாயம் அமைக்க முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

2017 ஜூலை 5]

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல் வரத்து இல்லாத காரணத்தினால்தான் அங்கு நெல் கொள்முதல் நிலையம் மூடப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி அங்கு நெல் விளைச்சல் இருக்குமானால், விவசாயிகளிடமிருந்து கோரிக்கை வரப்பெறுமானால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உடனடியாக அங்கு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினைத் திறக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காவேரி டெல்டா பகுதியைச் சார்ந்தவர். தமிழகத்தில் காவேரி டெல்டா பகுதிக்கு அடுத்து இரைவைப் பாசனம் மூலமாக நெல்லை விளைவிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்ற மாவட்டமாக திருவண்ணாமலை மாவட்டம் உள்ளது. தண்டராம்பட்டு, தானிப்பாடி ஆகியவை செங்கம் தொகுதியை உள்ளடக்கிய பகுதிகள். இப்பகுதிகளில் நெல் மற்றும் கரும்பு பெருமளவில் பயிர் செய்யப்படுகின்றன. அந்தப் பகுதிகளில் கடந்த காலங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்காத காரணத்தினால் விவசாயிகளிடத்தில் வியாபாரிகள் நேரடியாகச் சென்று குறைந்த விலையில் எடை போட்டு வாங்கிச் செல்வதாலும், விவசாயிகளுக்கு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சம்பந்தமாக விழிப்புணர்வு இல்லாததாலும். . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் சுருக்கமாகக் கேளுங்கள். நீங்கள் கேட்டபடி அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்.*

திரு. மு.பெ. கிரி: *நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு விவசாயிகள் நெல்லை எடுத்துவர இயலவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடி நெல் கொள்முதல் நிலையம் சம்பந்தமான விவரம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் அரசிடம் திட்டம்*

ஏதும் வைத்துள்ளார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய 40 ஆண்டுகால நெல் கொள்முதல் வரலாற்றிலே ஒரே ஆண்டில், 2011 ஆம் ஆண்டு 24 இலட்சம் மெட்ரிக் டன் நெல்லை கொள்முதல் செய்த அரசு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன்மூலம் 149 கோடி ரூபாயை ஊக்கத் தொகையாகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவசாயிகள் அங்கு சிரமப்படுகின்றனர் என்று சொன்னார்கள். கடந்த காலங்களில், அதாவது 2002 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஏகபோக நெல் கொள்முதல் திட்டம், இணைக் கொள்முதல் திட்டம், லெவி கொள்முதல் திட்டம் ஆகிய திட்டங்கள்தான் அமலில் இருந்தன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விவசாயிகளின் நலனைக் கருதி 1–10–2002 அன்று மத்திய அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு, பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தைக் கொண்டு வந்ததன் அடிப்படையில்தான், விவசாயிகள் இன்றைக்கு பாதிப்பு இல்லாமல் தங்களது நெல்லை உரிய விலைக்கு விற்கிறார்கள். எனவே, அம்மா அவர்களுடைய ஆட்சி விவசாயிகளைப் பாதுகாக்கின்ற ஆட்சி. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி விவசாயிகளுடைய நலன்களைச் செம்மையாகப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றது. அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதியில் நெல் விளைச்சல் இருக்கின்றது என்று சொல்கிறார்களோ உடனடியாக அந்தப் பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.